செ.வெ.எண்: 548 நாள்: 22.08.2019

**கொசுப்புழுக்கள் உற்பத்தியாகாமல் தடுக்கும் வகையில் வியாழக்கிழமைகள் தோறும் மாவட்டம் முழுவதும் அரசு மற்றும் தனியார் இடங்களில் தூய்மைப் பணிகள் மேற்கொள்ள உத்தரவு.**

**மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் தகவல்.**

---

மழைப்பொழிவு தொடங்கியுள்ள நிலையில் கொசுப்புழுக்கள் உற்பத்தியாவதை தடுக்கும் வகையில் வியாழக்கிழமைதோறும் புதுக்கோட்டை மாவட்டத்தில் அனைத்து தரப்பினரும் தூய்மைப்பணிகளை மேற்கொள்ளும் பொருட்டு முன்மாதிரியாக மாவட்ட ஆட்சியரகத்தில் ஆட்சித் தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி.இ.ஆ.ப., அவர்கள் இன்று (22.08.2019) தூய்மை பணியினை துவக்கி வைத்தார்.

இதன் பின்னர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவிதத்தாவது.

பருவகால மாற்றத்தின் காரணமாக ஏற்படும் நோய்களிலிருந்து பொது மக்களை காத்திடும் வகையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பல்வேறு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ள அறிவுறுத்தியுள்ளார்கள். அதனடிப்படையில் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் அனைத்து துறை அலுவலர்களையும் ஒருங்கிணைத்து மாவட்ட நிர்வாகத்தால் மேற்கொள்ளப்பட வேண்டிய தூய்மைப் பணிகளில் கவனம் செலுத்த அறிவுறுத்தியுள்ளார்கள்.

அந்த வகையில் இன்றைய தினம் தூய்மைப்பணியினை மாவட்ட ஆட்சியரகத்திலிருந்து தொடங்கப்பட்டுள்ளது. இனி வரும் ஒவ்வொரு வியாழக்கிழமையும் புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள அரசு, உள்ளாட்சி

அமைப்புகள் மற்றும் தனியார் நிறுவன வளாகங்கள் ஒட்டு மொத்த தூய்மைப்பணி மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது. அந்நாளில் அப்பகுதியில் உள்ள அனைத்து குப்பைகள் மற்றும் திடக்கழிவுகளை அப்புறப்படுத்துதல், குடிநீர் ஆதாரத் தொட்டிகளை தூய்மைப்படுத்தி குளோரினேசன் செய்தல் மற்றும் கொசு ஒழிப்புப்பணிகள் உள்ளிட்ட தூய்மைப் பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளது.

பொது சுகாதாரத்துறையின் மூலம் 130 தற்காலிக களப்பணியாளர்கள், ஊராட்சி ஒன்றியங்கள் மூலம் 260 தற்காலிக களப்பணியாளர்கள், பேரூராட்சிகள் மூலம் 80 தற்காலிக பணியாளர்கள் மற்றும் நகராட்சிகள் மூலம் 152 தற்காலிக பணியாளர்கள் என மொத்தம் 622 தற்காலிக பணியாளர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். குறிப்பாக பொது மக்கள் தங்கள் வீட்டின் உள்ளேயும், வீட்டை சுற்றிலும் கொசுப்புழுக்கள் உற்பத்தியாகாத வகையில் தூய்மையாக பராமரித்துக் கொள்ள வேண்டும். இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் டி.சாந்தி, கோட்டாட்சியர் தண்டாயுதபாணி, துணை இயக்குநர்கள் (சுகாதாரப்பணிகள்) மரு.பரணிதரன், மரு.கலைவாணி, உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) பாலமுரளி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) முத்துவடிவேல் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

---

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், புதுக்கோட்டை.**